செயலாற்றுகை அறிக்கை

2021

செலவுத் தலைப்பு- 418

බන්ධනාගාර කළමනාකරණ හා සිරකරුවන් පුනරුත්ථාපන කටයුතු රාජ්‍ය අමාත්‍යාංශය

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு

State Ministry of Prison Management and Prisoners' Rehabilitation Affairs

சீரமைப்பு

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு 1

1.1. அறிமுகம் 1
1.2. நோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள் 1
1.3. பணிகள் மற்றும் செயற்பாடுகள் 2
1.4. அமைப்பின் கட்டமைப்பு 3
1.5. அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் 4

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம் 5

அத்தியாயம் 03 - 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக நிதி செயலாற்றுகை கூற்று 9

3.1. நிதி செயலாற்றுகை கூற்று 9
3.2. நிதி நிலைமை தொடர்பான கூற்று 10
3.3. காசுப் பாய்ச்சல் கூற்று 11
3.4. வருமானம் சேகரிப்பு செயலாற்றுகை 12
3.5. ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை 12
3.6. நி.பி.கு 208 பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராகஇத் திணைக்களம்/ மாவட்ட செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடுகள் 12
3.7. நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை 13

அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள் 14

4.1. சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகளை புனர்வாழ்வளிக்கும் இராஜாங்க அமைச்சின் செயலாற்றுகைச் சுட்டிகள் செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்) 14

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள் (ளுனுபு) பூர்த்தி செய்துகொள்வதன் செயலாற்றுகை 15

5.1. அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக் காட்டுக 15

5.2. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை பூர்த்தி செய்து கொள்வதன் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விளக்குக. 15

அத்தியாயம் 06 - மனித வள விபரம் 17

6.1. பதவியணி முகாமைத்துவம் 17

6.2. பற்றாக்குறையானது அல்லது அதிகபடியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாக குறிப்பிடுக. 19

6.3. மனித வளங்களின் அபிவிருத்தி 19

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை 20

1

நிறுவனத்தின் தோற்றப்பாடு / செயற்படுத்துவதன் பொழிப்பு

1.1. அறிமுகம்

2020 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி புதிய இராஜாங்க அமைச்சாக தாபிக்கப்பட்ட இநத அமைச்சு திட்டமிட்டவாறு பரந்த மறுசீரமைப்புச் செயன்முறையொன்றை அமுல்படுத்தி வருவதுடன், சிறைச்சாலைகள் திணைக்களம், சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம் மற்றும் புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகத்துடன் இணைந்து நல்லதொரு ஒருங்கிணைப்பைப் பேணி செயற்பட்டு வருகின்றது. ‘‘புனர்வாழ்வின் மூலம் சட்டத்தை மதிக்கும் சமூகம்’’ எனும் நோக்கை மையமாகக் கொண்டு பயணிக்கும் இந்த அமைச்சு எதிர்காலத்தில் பல இலக்குகளை அடைந்துகொள்வதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

.

1.2. நோக்கு, செயற்பணி, நோக்கங்கள

❋ நோக்கு

புனர்வாழ்வின் மூலம் சட்டத்தை மதிக்கும் சமூகம...

❋ செயற்பணி

நிதி மற்றும் மனிதவளங்களை வினைத்திறனுடனும், விளைதிறன்மிக்கவாறும் பயன்படுதிதக் கொண்டு இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கிவருகின்ற திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்து நல்லதொரு கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பின் மூலம் கைதிகளுக்கு புனர்வாழ்வளித்து நல்ல பிரசைகளாக சமூகமயப்படுத்தல.


❋ விசேட முன்னுரிமைகள

- ❖ சனாதிபதி செயலணியுடன் இணைந்து சிறைச்சாலைகளில் இடம்பெறுகின்ற சமூக விரோத செயற்பாடுகளை ஒழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- ❖ சனாதிபதி செயலணியுடன் இணைந்து சிறைச்சாலைகளின் உட்கட்டமைப்ப வசதிகளை அபிவிருத்தி செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ❖ சிறைச்சாலைகளினுள் குற்றவாளிகளை கண்காணிப்புச் செய்வதற்கான நவீன தொழில்நுட்ப முறையியல்களை தாபித்தல்.
- ❖ சிறைச்சாலைகளில் நெரிசலை குறைப்பதற்காக பொது மன்னிப்பு வழங்கும் கொள்கைசார் செயற்பாட்டுக்கு மேலதிகமாக மீளாய்வு முறையியல் ஊடாக விசேட மன்னிப்பு வழங்கும் பொறிமுறையை தயார் செய்தல்.
- ❖ சிறைக்கைதிகளுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான பரந்ததொரு முறையியலை தயார் செய்தல்.
- ❖ சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அலுவலர்கள், ஊழியர்களின் நிருவாகச் சிக்கல்களை துரிதமாக தீர்த்துவைத்தல.

1.3.செயற்பாடுகளும், பணிகளும

நீதி அமைச்சரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் "சட்டத்தின் ஆதிக்கத்தை பாதுகாப்பதற்காக" குறித்த சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களுக்கு அமைய சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் கைதிகள் புனர்வாழ்வளிப்பு விடயம் தொடர்பிலான கொள்கைகளை வகுக்க உதவுதல், தேசிய வரவு செலவுத்திட்டம், அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் காணப்படுகின்ற கருத்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அது சம்பந்தமான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை அமுல்படுத்தல், பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல.

1.4. நிறுவன ஒழுங்கமைப்பு



1.5. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள



2

முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1. 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முன்னோடிப் பணிகளின் முன்னேற்றம்

2020 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி புதிய இராஜாங்க அமைச்சாக தாபிக்கப்பட்டுள்ள இந்த அமைச்சினால் 2021.01.01 முதல் 2021.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் காலப்பகுதியில் இந்த அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள சிறைச்சாலைகள் திணைக்களம், சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம் மற்றும் புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகம் ஆகிய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பணிகள் தொடர்பிலான கண்காணிப்பு, வழிப்படுத்தல் மற்றும் பின்னாய்வு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1. கடும் வகையிலான குற்றவாளிகளினால் சிறைச்சாலைகளினுள்ளேயே இருந்தவாறு மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு குற்றச்செயல்கள் மற்றும் ஊழல் செயற்பாடுகளின் காரணமாக சமூகத்தில் சிக்கலான நிலைமை கடந்த பல வருடகாலமாக ஏற்பட்டுள்ளது. இந்த கடும் வகையிலான குற்றவாளிகளை தனித்தனியாக தடுத்துவைத்திருப்பதற்காக பூஸ்ஸ சிறைச்சாலையை கடும் பாதுகாப்பு சிறைச்சாலையொன்றாக அபிவிருத்தி செய்ய முடிந்துள்ளது. அதற்கமைய பூஸ்ஸ சிறைச்சாலையில் கடும் பாதுகாப்புடனான சிறைக்கூடங்கள் 107 ஐ அமைப்பதற்கு திட்டமிடப்பட்டதுடன், தற்போது அவை அனைத்தினதும் வேலைகள் நிறைவு செய்யப்பட்டு கடும் வகையிலான குற்றவாளிகளை தடுத்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2. தற்போது சிறைச்சாலைகள் கட்டமைப்பு எதிர்நோக்கியுள்ள பிரதான சிக்கலொன்றான சிறைச்சாலைகளில் நிலவும் கடும் நெரிசல் தொடர்பில் மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய பொது மன்னிப்பு வழங்கும் கொள்கைச் செயன்முறைக்கு மேலதிகமாக மீளாய்வு செயன்முறை ஊடாக விசேட மன்னிப்பு வழங்கும் பொறிமுறை தயார் செய்யப்பட்டுள்ளது. இது இந்த இராஜாங்க அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள விசேட முன்னோடி அம்சங்களில் ஒன்றாகும்.

3. அதிக சிறைச்சாலை நெரிசலுக்கு போதைவஸ்துக்களுக்கு அடிமையாகி சிறையில் அடைக்கப்படும் கைதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வது இதற்கான முக்கிய காரணமாக அமைச்சு இனங்கண்டுள்ளது. கைதிகளின் நெசரில் அதிகரிப்பதன் காரணமாக போதைவஸ்துக்களுக்கு அடிமையாகி சிறையில் அடைக்கப்படுவோருக்கு முறையான சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது கடினமாகும். இதற்குத் தீர்வாக வீரவில சிறைச்சாலையில் போதைவஸ்துக்களுக்கு அடிமையாகி தவறாளியாகும் ஆட்களுக்கான சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளிக்கும் நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

4. கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காணப்பட்ட போது ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் அனுசரணையின் கீழ் சகல சிறைச்சாலைகளுக்கும் சீடிஎம்ஏ தொலைபேசிச் சேவைகள் வழங்கப்பட்டதுடன், அதன் மூலம் கைதிகள் இலவசமாக தொலைபேசி அழைப்புக்களை தமது குடும்பத்தவர்களுக்குப் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது.

5. சிறைச்சாலை கைதிகளின் தகவல்களை மிகத் துரிதமாகவும், சரியாகவும் பெற்றுக் கொள்வதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள கணினிமயப்படுத்தப்பட்ட வலையமைப்பின் மூலம் தகவல்களை ஒன்றுதிரட்டும் கருத்திட்டத்தை தற்போது சகல சிறைச்சாலைகளிலும் அமுல்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனூடாக தகவல்களை ஒன்றுதிரட்டி தொடர்பாடலில் துரித முறையொன்றை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

6. சிறையில் அடைக்கப்படும் கைதிகளின் பாதுகாப்பு, அரவணைப்பு மற்றும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு சிறைச்சாலை நிறுவனங்களுக்கு போதியளவு அலுவலர்கள் இருப்பது அத்தியாவசியமானதாகும். அதற்கமைய, சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அலுவலர் பற்றாக்குறைக்குத் தீர்வாக சிறைச்சாலை அலுவலர்கள் 595 பேரை துரிதமாக ஆட்சேர்ப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

7. மேன்மைதங்கிய சனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய சிறைச்சாலைகளில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், சிறைச்சாலைகள் உளவுப் பிரிவை வலுவூட்டுவதற்குமாக முப்படைகளிலிருந்து சட்டபூர்வமாக வெளியேறியுள்ள அலுவலர்கள் 500 பேரை சிறைச்சாலைகள் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்களில் 194 பேர் 2021 ஆம் ஆண்டு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள்.

8. 2021 ஆம் ஆண்டு தவறாளிகள் 5743 பேர் சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தரவின் கீழ் சமுதாயஞ்சார் சீர்திருத்தத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளார்கள். இது சிறைச்சாலைகளின் நெரிசலை குறைப்பதற்கு காரணமாக அமந்துள்ளது.

9. குற்றவாளிகளின் நலன்புரிக்காக நீதிமன்றத்தின் விருப்பத்திற்கு அமைய சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தரவை வழங்குவதற்கு 1999 இன் 49 ஆம் இலக்க சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டத்தின் 07 ஆம் பிரிவினை திருத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் ஒரு சில பிரிவுகளை திருத்தம் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

10. சிறைச்சாலைகள் திணைக்களம் எதிர்நோக்கியுள்ள பிரதான சவாலாக இருப்பது அதிக கைதிகளின் நெரிசலாகும். 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 22000 இற்கும் மேற்பட்ட கைதிகளின் எண்ணிக்கையை ஆண்டின் இறுதியில் வழக்கு நடவடிக்கைகளை முறைப்படுத்தல் மற்றும் பொது மன்னிப்பு வழங்கும் கொள்கைசார் செயன்முறை போன்ற முறையியல்களைப் பின்பற்றியதன் மூலம் சுமார் 18400 ஆகக் குறைத்துக் கொள்ள முடிந்தது.

11. சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளுக்கு வீடியோ தொழில்நுட்பம் ஊடாக தமது உறவினர்களைப் பார்ப்பதற்கு வாய்ப்பளிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன், ஆரம்பத்தில் அங்குனகொலபெலெஸ்ஸ சிறைச்சாலையில் அமுல்படுத்தப்பட்ட இத்திட்டம் 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் சகல சிறைச்சாலைகளிலும் அமுல்படுத்தப்பட்டது.

12. சிறைச்சாலை கைதிகளை பார்வையிடுவதற்கு வருகைதந்த உறவினர்களுக்கு ஏற்பட்ட பல்வேறு அசௌகரியங்களையும் தவிர்ப்பதற்காக முன்னதாகவே நேரத்தை ஒதுக்கிக் கொண்டு வருகைதரும் முறை அறிமுகம் செய்யப்பட்டது. இதற்கமைய தேவையான நேரத்தை ஒதுக்கிக் கொண்டு தமது உறவினர்களை பார்வையிடும் வாய்ப்பு உருவாகின்றது.

13. மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் ஆலோசனைக்கு அமைய போதைவஸ்துக்களுக்கு அடிமையானவர்கள் 8000 பேருக்கு புனர்வாழ்வளிக்கும் பொறுப்பு புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இரஹந்தகெட்டுவெவ, கந்தளாய், நொச்சியாகம ஆகிய பிரதேசங்களில் புதிய புனர்வாழ்வளிப்பு நிலையங்களைத் தாபிக்க உகந்த காணிகள் இனங்காணப்பட்டு உரிய புதுப்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன.

14. புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகத்தின் கீழ் உள்ள சேனபுர மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி பயிற்சி நிலையத்தின் நிர்மாணக் கருத்திட்டங்கள் 12 இல் 2021 ஆம் ஆண்டில் ரூ.மி. 38.75 ஆன பெறுமதியைக் கொண்ட 03 கருத்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

மேலுள்ள பணிகளை கண்காணிப்புச் செய்வதற்கு இந்தக் காலப்பகுதியில் இந்த அமைச்சினால் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பில் முன்னேற்ற மீளாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், அடுத்தகட்டப் பணிகளுக்கு அந்நிறுவனங்களை வழிநடாத்தி கலந்துரையாடல்களின் போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்துவது தொடர்பில் பின்னாய்வும் செய்யப்பட்டது.

தொடர் இல.	**விடயம்**	**கூட்டங்களின் எண்ணிக்கை**
1.	முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் ➢ மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் ➢ 2021 செயற்றிட்டத்திற்கு அமைய முன்னேற்ற மீளாய்வு	 7 2
2.	சிறைச்சாலைகளில் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அவசர நடவடிக்கை உபாயமுறை படையணியை தாபித்தல்	2
3.	சிறைச்சாலை கைதிகளை ஊழியப் படையணியாக பயன்படுத்திக் கொள்ளல்	1
4.	நிர்மாணிப்பு ➢ சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிர்மாணிப்புக்கள் ➢ புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகத்தின் நிர்மாணிப்புக்கள்	 4 1
5.	சிறைக்கைதிகளின் நெரிசலை குறைக்கும் பொறிமுறையை தாபித்தல்	5
6.	மஹர சிறைச்சாலையை முறைப்படுத்தல்	2
7.	அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்	3
8.	புனர்வாழ்வளிப்பு செயன்முறையை முறைப்படுத்தல்	1

இதற்கு மேலதிகமாக 2021 ஆம் ஆண்டு 04 காலாண்டுகளுக்குமான முன்னேற்ற அறிக்கைகள் கருத்திட்ட முகாமைத்துவத் திணைக்களத்திடம் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

மேலும் 2020.11.29 ஆம் திகதி மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தை அடிப்படையாகக் கொண்டு கௌரவ நீதி அமைச்சரின் ஆலோசனையின் பேரில் மேற்படி சம்பவத்தை விசாரணை செய்வதற்கு நியமனம் செய்யப்பட்ட குழுவின் சிபாரிசின் அடிப்படையில் இனங்காணப்பட்ட செயற்பாடுகளை 2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்த சிறைச்சாலைகள் திணைக்களம் வழிநடாத்தப்பட்டது. குறிப்பாக மீண்டும் இவ்வாறான நிமை எழும் பட்சத்தில் இடம்பெறக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக் கொள்ளக்கூடியவாறு சேதமடைந்த

கட்டிடங்களை சிறைச்சாலை காணிக்கு வெளியே தாபிப்பதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், 2022 வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் நிர்மாணப் பணிகள் 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சிறைச்சாலை நெரிசல் கடுமையாகக் காணப்பட்ட இக்காலப்பகுதியில் 20000 இற்கும் மேற்பட்ட விளக்கமறியல் கைதிகளின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்வதற்காக மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களான இலங்கை பொலிஸ், நீதி அமைச்சு, நீதிச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் சட்ட மாஅதிபர் திணைக்களம் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களின் ஒத்துழைப்புடன் விளக்கமறியல் கைதிகளின் எண்ணிக்கையை 11110 ஆகக் குறைத்துக் கொள்ள வாய்ப்புக் கிடைத்துள்ளது.

சிறைச்சாலை கைதிகளின் தகவல்களை ஒன்றுதிரட்டும் கருத்திட்டத்தின் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டு சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா மில்லியன் 15 ஆன ஏற்பாடுகள் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடுகளை வெற்றிகரமாக பயன்படுத்திக் கொண்டு இக்கருத்திட்டத்தை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் நிருவாக நடவடிக்கைகளை மென்மேலும் முறைப்படுத்தும் நோக்கத்துடன், அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் 10 உம் 2021 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2.2. எதிர்கால இலக்குகள்

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள சிறைச்சாலைகள் திணைக்களம், சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம் மற்றும் புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகம் ஆகிய நிறுவனங்களினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள பின்வரும் பணிகளை திட்டமிடல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் வழிநடாத்தல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வது இந்த அமைச்சினால் திட்டமிடப்பட்டுள்ளது.

1. வெலிகட சிறைச்சாலை கட்டிடத் தொகுதியை ஹொரன மில்லேவ பிரதேசத்தில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் மீளத்தாபிக்கும் கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் கீழ் சிறைச்சாலைகள் வெலிகட சிறைச்சாலை, மெகசின் சிறைச்சாலை, பெண்கள் பிரிவு, சிறைச்சாலை வைத்தியசாலை மற்றும் சிறைச்சாலை பயிற்சிப் பாடசாலை என்பன மீளத்தாபிக்கப்படவுள்ளன. இதற்கு மேலதிகமாக, சிறைச்சாலைகள் தலைமையகத்தை பத்தரமுல்ல பிரதேசத்திற்கும், சிறைச்சாலைகள் உத்தியோகபூர்வ இல்லங்களை மாலம்பே பிரதேசத்திற்கும் கொண்டு செல்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்திற்கு ரூபா பில்லியன் 31.4 செலவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2. வாரியபொல சிறைச்சாலையை விஸ்தரிக்கும் கருத்திட்டத்திற்கு தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரம் ஏற்கெனவே கிடைத்துள்ளது. இக்கருத்திட்டத்திற்கு ரூபா மில்லியன் 1244.6 மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இக்கருத்திட்டம் 2022 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்படவுள்ளது.

3. சிறைச்சாலைகள் நிருவாகம் மற்றும் பாதுகாப்புக்கு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

   இதன் கீழ் வெலிக்கட சிறைச்சாலைகள் கட்டிடத் தொகுதியில் ரூபா மில்லியன் 47 செலவில் சீசீரீவீ கெமரா கட்டமைப்பு தாபிக்கப்பட்டு வருகின்றது. மேலும் ரூபா மில்லியன் 17.8 செலவில் களுத்துறை, மஹர, நீர்கொழும்பு சிறைச்சாலைகளிலும் சீசீரீவீ கட்டமைப்புக்களை பொருத்துவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன், களுத்துறை மற்றும் நீர்கொழும்பு சிறைச்சாலைகளின் சீசீரீவீ கட்டமைப்புக்கள் பொருத்தி முடிக்கப்பட்டுள்ளன.

4. சமுதாயஞ்சார் சீர்திருத்த முறையை விஸ்தரிக்க வேண்டியதன் அவசியத்தன்மையை அமைச்சு இனங்கண்டுள்ளதுடன், அதற்கமைய அடுத்துவரும் ஆண்டுகளில் சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தரவுபெற்ற 20000 பேருக்கு புனர்வாழ்வளிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

போதைவஸ்துக்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் பொறுப்பு, புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்காலத்தில் போதைவஸ்துக்களுக்கு அடிமையானவர்கள் 8000 பேருக்கு புனர்வாழ்வளிப்பதற்கு போதியளவில் புனர்வாழ்வளிப்பு நிலையங்களின் எண்ணிக்கையை விஸ்தரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது

மேஜர் ஜெனரால் (ஓய்வூதிய) வீ.ஆர்.சில்வா
செயலாளர்
சிறைச்சாலைகள் முகாமைத்துவ மற்றும் சிறைக் கைதிகள்
புனர்வாழ்வு நடவடிக்கைகளின் இராஜாங்க அமைச்சு

3

2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

3.1. நிதிச் செயலாற்றுகைப் பற்றிய கூற்று

ஏசீஏ- எப
(ரூபா)

பாதீட்டு 2021		குறிப்பு	உண்மை நிலை 2021	2020	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-		ஏசீஏ -1
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-			-	-	
-	**வருமானம் அல்லாத பெறுகைகள்**		639,880,000	312,539,390	ஏசீஏ -3
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		8,922,563	12,942,138	ஏசீஏ -4
-	வைப்புகள்		7,155,129	39,433,545	ஏசீஏ -5
-	முற்பணக் கணக்குகள் ஏனைய பெறுகைகள்		-		
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**655,957,692**	**364,915,073**	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**655,957,692**	**364,915,073**	
	திறைசேரி அனுப்புதொகை (ஈ)		**475,716**	-	
	தேறிய வருமானம் பெறுகை மற்றும் வருமானம் அல்லாத பெறுகை உ = (இ)-(ஈ)		**655,481,976**	**364,915,073**	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		-	-	
65,800,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	45,436,136	10,275,173	
80,800,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	67,870,886	10,660,136	
260,500,000	மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள்	7	202,631,246	189,397,863	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	ஏசீஏ -2(ii)
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
407,100,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)**		**315,938,268**	**210,333,172**	
	மூலதனம் செலவினம்				
4,100,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	2,997,109	346,029	
5,500,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	6,603,739	854,029	
1,100,000,000	மூலதன மாற்றல்கள்	12	476,469,765	288,513,599	ஏசீஏ -2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
1,500,000	மனித வள அபிவிருத்தி	14	128,000	-	
19,500,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	19,158,722	-	
1,130,600,000	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**505,357,336**	**289,713,657**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		16,733,522	5,868,766	ஏசீஏ -4
	முற்பணக் கொடுப்பனவுகள்		5,824,939	52,913,417	ஏசீஏ -5
	வேறு பிரதான பேரேட்டு கணக்கு செலுத்தல்கள்		-	-	
	பிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		**22,558,461**	**58,782,183**	
	மொத்த செலவினம் எ = (ஊ+எ+ஏ)		843,854,065	558,829,012	
1,537,700,000	**டிசம்பர் 31ல் உள்ளவாறான மீதி ஒ = (உ-ஐ)**		**(188,372,089)**	**(193,913,939)**	

3.2. நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

2021 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2021 ரூபா	2020 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	287,992,491	244,350,027
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	12,149,682	13,479,872
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**300,142,173**	**257,829,898**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
தேறிய பெறுமதி		(772,276)	(7,253,046)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		287,992,491	244,350,027
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்பக் கணக்குகள்	ஏசீஏ-4	12,921,958	20,732,917
பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**300,142,173**	**257,829,898**

மேலே உள்ள ஏ.சி.ஏ வடிவத்தில் எண் 7 முதல் 50 வரை சமர்ப்பிக்கப்பட்ட விரிவான கணக்கு அறிக்கைகள் மற்றும் 51 முதல் 59 வரையான பக்கங்களில் வழங்கப்பட்ட கணக்குகளுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதிகளாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி மிகவும் பொருத்தமான கணக்கியல் பகாள்றககள் பயன்டுத்தபபட்டுள்ளன. இறுதிக் கணக்கின் புள்ளிவிவரங்கள், தொடர்புறடய க க்கியல் குறிப்புகள் மற்றும் பிற கணக்கியல் தகவல்கள் திறைசேரி கணக்கு புத்தகங்களுடன் ஒப்பிடப் ட்டுள்ளதுடன் இந்த புள்ளிவிவரங்களுடன் உடன்படுகின்றன என்பதை நாங்கள் இதன்மூலம் சான்றளிக்கிறோம்.

.....	.....	.....
பிரதான கணக்கீட்டு அலுவலர்	கணக்கீட்டு அலுவலர்	பிரதான நிதி அலுவலர்.'. பிரதான கணக்காளர்.'.
பெயர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னே பதவி : செயலாளர் திகதி : 22.02.2022	பெயர்: பதவி : திகதி :	ஆர்.ரீ.பீ.ஏ.ஏ. ரத்நாயக்க பிரதம நிதி அலுவலர் திகதி : 22.02.2022

3.3. காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ- சீ

2021 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

	உண்மை	
	2021 ரூபா	2020 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய செலவின தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	13,229,349	610,467
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	639,880,000	312,380,174
முற்பணம் அறவிட்டுக் கொள்ளல்	6,198,784	5,386,631
வைப்புத்தொகை	8,922,563	12,942,138
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**668,230,696**	**331,319,411**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு	315,557,383	20,935,309
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுடுக் கொடுப்பனவுகள்	348,685	74,747,813
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	7,937,943	30,839,310
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	475,716	-
முற்பணம் செலுத்தல்	6,420,111	8,341,612
வைப்புத்தொகை கொடுப்பனவுகள்	16,733,522	5,868,766
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**347,473,360**	**140,732,810**
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**320,757,336**	**190,586,601**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
பொளதீக சொத்துக்களின் சொத்துக்களின் விற்பனை	-	-
வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முற்பணங்களிலிருந்து அறவிடப்பட்டவை	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	320,757,336	190,586,601
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:	**320,757,336**	**190,586,601**
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	**(320,757,336)**	**(190,586,601)**
முற்பணக் கொடுப்பனவுகள்	-	-
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	-	-
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	-	-
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ-ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
கிடைக்கப்பெற்ற வைப்புகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:	-	-
உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-

3.4. வருமானம் சேகரிப்பதன் செயலாற்றுகை

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டு விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூ.)	இறுதி வருமான மதிப்பீட்டின் விகிதமாக
-	-	-	-	-	-

3.5. ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை

ரூபா ,000

ஏற்பாடுகளின் வகை	ஒதுக்கப்பட்ட ஏற்பாடு		உண்மை செலவினம்	பயன்படுத்திக் கொள்ளப்பட்ட ஏற்பாடுகள், நிறைவு செய்யப்பட்ட இறுதி ஏற்பாடுகளின் % ஆக
	நிதி ஏற்பாடு	இறுதி ஏற்பாடு		
மீண்டெழுவன	407,100	402,220	315,938.268	79
மூலதன	1,130,600	1,135,480	505,357.336	45

3.6. நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்∴ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் / மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

ரூபா ,000

தொடர் இல	அமைச்சு/ திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
			அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
	நீதி அமைச்சு	கட்டிட வாடகை செலுத்த (2 ஆம் 3 ஆம் மாடிகளை பயன்படுத்த)	5,400	5,400	5,400	100
	அரச சேவைகள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு	பட்டதாரி பயிலுனர் பயிற்சி கொடுப்பனவு	4,020	4,020	2,366.666	59
	ஓய்வூதியத் திணைக்களம்	அனர்த்தக் கடன் நிலுவையை தீர்த்தல்	171.276	171.276	171.276	100

3.7. நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை

ரூபா ,000

ஆதனக் குறியீடு	குறியீட்டு விபரம்	2021.12.31 ஆம் திகதிக்கு பொருட் கணிப்பீட்டு அறிக்கைக்கு அமைய மீதி	2021.12.31 ஆம் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்றுக்கு அமைய மீதி	எதிர்காலத்தில் கணக்கீட்டுக்கு உட்படுத்தப்பட உள்ளது	முன்னேற்றத்தை % ஆக அறிக்கையிடல்
9151	கட்டிடமும், கட்டமைப்புக்களும்	-	-	-	-
9152	இயந்திரசாதனம்	287,992.491	287,992.491	-	-
9153	காணி	-	-	-	-
9154	அருவைச் சொத்துக்கள்	-	-	-	-
9155	உயிரியல்சார் சொத்துக்கள்	-	-	-	-
9160	மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைகள்	-	-	-	-
9180	குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள்	-	-	-	-

4

செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1. சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்றிட்டத்தின் அடிப்படையில்)

விசேட சுட்டிகள்	உத்தேச பூர்த்தி செய்தலின் விகிதமாக (%) உண்மையாக பூர்த்தி செய்தது		
	100%-90%	75%-89%	50%-74%
விளக்கமறியல் கைதிகளின் எண்ணிக்கையை குறைத்தல்		75%	
சிறைச்சாலைகளின் நெரிசலை குறைப்பதற்காக பொது மன்னிப்பளிக்கும் கொள்கைசார் செயன்முறைக்கு மேலதிகமாக மீளாய்வு செயன்முறை ஊடாக விசேட மன்னிப்பளிக்கும் பொறிமுறையை தயார் செய்தல்.	100%		
சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அலுவலர்களின் ஊழியர் நிருவாக சிக்கல்களைத் துரிதமாகத் தீர்த்தல்			50%

5

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதன் செயலாற்றுகை

5.1. இனங்காணப்பட்ட ஏற்புடையதான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடுக

இலக்கு/ நோக்கம்	இலக்கு	வெற்றிச் சுட்டிகள்	இதுவரை வெற்றிபெற்றுக் கொள்வதன் முன்னேற்றம்		
			0%-49%	50%-74%	75%-100%
நிலைபேறான அபிவிருத்திக்கு அமைதியான மற்றும் பூரணமான சமூகங்களை ஏற்படுத்தல், நியாயத்திற்கு சகலருக்கும் வாய்ப்பை பெற்றுக் கொடுத்தல் மற்றும் சகல மட்டங்களிலும் விளைதிறனும், பொறுப்பும்மிக்க பூரணத்துவம் மிக்க நிறுவனங்களை கட்டியெழுப்பல்	சகலருக்கும் சட்டத்தின் நியாயத்தன்மையை பெற்றுக் கொள்ள முடியுமாதல் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சட்டத்தின் ஆதிக்கத்தை மேம்படுத்தல்	ஒட்டுமொத்த சிறைக்கைதிகளின் எண்ணிக்கையில் தண்டனை விதிக்கப்படாத கைதிகளின் எண்ணிக்கை		70%	

5.2. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை பூர்த்தி செய்து கொள்வதன் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விளக்குக

எமது நாட்டில் சிறைச்சாலைகளின் நெரிசலுக்கு முக்கியமான காரணமாக இருப்பது அதிகரித்துள்ள விளக்கமறியல் கைதிகளின் எண்ணிக்கையாகும். நீதிவான் நீதிமன்றங்கள் நாட்டின் சகல பிரதேசங்களிலும் தாபிக்கப்பட்டுள்ளன. பொலிஸ் சேவையும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. பொலிஸ், நீதிமன்றம், சிறைச்சாலை என்பன குற்றவியல் நியாயத்தை நிலைநாட்டும் கட்டமைப்பின் பிரதான மூன்று நிறுவனங்களாகும். ஏனைய இரண்டு நிறுவனங்களுடனும் ஒப்பிடும் போது சிறைச்சாலைகள் சேவை விஸ்தரிக்கப்படாதுள்ளது. இந்நிலைமையில் இன்று சிறைச்சாலை நிருவாகம் முகம்கொடுத்துள்ள பிரதான சிக்கலாக இருப்பது, சிறைச்சாலைகளில் காணப்படுகின்ற கடும் நெரிசல் நிலையாகும். இலங்கையின் சிறைச்சாலைகள் கட்டமைப்பில் தடுத்துவைத்திருக்கக்கூடிய கைதிகளின் எண்ணிக்கை 11762 பேர் ஆகும். எனினும் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் காணப்பட்ட மொத்தக் கைதிகளின் எண்ணிக்கை 18325 பேர் ஆகும். மேற்படி எண்ணிக்கையில் விளக்க மறியல் கைதிகளின் எண்ணிக்கை 11107 பேர் ஆகும். சிறைச்சாலைகளில் உள்ள தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் விளக்கமறியலில் உள்ள கைதிகளின் எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்துச் செல்வது சாதகமானதொரு நிலைமையல்ல என்பது இனங்காணப்பட்டுள்ளது. இதற்காக கடந்த சில மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட கடும்

முயற்சிகளின் பெறுபேறாக விளக்க மறியல் கைதிகளின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ள வாய்ப்புக் கிடைத்தது.

சிறைச்சாலைகளின் நெரிசலுக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ள விளக்கமறியல் கைதிகளின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்வது பாரிய சவாலாக மாறியுள்ளது. விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ளும் போது சிறைச்சாலைகள் திணைக்களம் மாத்திரம் அச்சவாலை தனியாக வென்றெடுக்க முடியாது. பொலிஸ், நீதிமன்றம் போன்ற குற்றவியல் நியாயத்ஐ நிலைநாட்டும் கட்டமைப்பின் ஏனைய நிறுவனங்களுக்கும் பாரியதொரு செயற்பணி பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. அதிக சிறைச்சாலை நெரிசல் சிக்கலைத் தீர்ப்பதற்கான 02 முக்கிய முறைகள் இனங்காணப்பட்டுள்ளன. இதில் ஒன்றாக இருப்பது சிறைக்கைதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதாகும். இதன் போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்வது அத்தியாவசியமான விடயமாகும். இரண்டாவதாக செய்ய வேண்டியது, சிறைச்சாலைகளை நிர்மாணித்தல் அல்லது தற்போதுள்ள சிறைச்சாலைகளின் கட்டிட வசதிகளை அதிகரிப்பதாகும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் கூட புதிய சிறைச்சாலைகளை நிர்மாணிப்பதானது செலவு அதிகமான பிரேரணையாக உள்ளது. எனவே எமது நாட்டுக்குப் பொருத்தமானதாக இருப்பது சிறைச்சாலைகளுக்கு அனுமதிக்கும் எண்ணிக்கையைக் குறைப்பதாகும். குறிப்பாக அதிகரிக்கின்ற சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் புதிய சிறைச்சாலைகளை நிர்மாணிப்பது பொருளாதார ரீதியாக அவ்வளவு நல்லதொரு விடயமல்ல. எனினும் சமுதாயஞ்சார் சீர்திருத்த முறையை மென்மேலும் பலமுடன் அமுல்படுத்துவதன் அவசியத்தன்மை இனங்காணப்பட்டுள்ளது. இந்நிலைமையில் விளக்கமறியலில் வைக்கப்படும் கைதிகளின் எண்ணிக்கையை குறைத்துக் கொண்டு மற்றும் மாற்று தண்டனை முறைகளைப் பின்பற்றி சிறைச்சாலைகளின் அதிக நெரிசலை குறைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்வது எம்முன் உள்ள முன்னோடிச் சவாலாகும்.

6

மனித வளத் தோற்றப்பாடு

6.1. பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	வெற்றிடம் / (மிகை) **
சிரேஷ்ட	17	10	7
மூன்றாம் நிலை	3	2	1
இரண்டாம் நிலை	107	31	76
ஆரம்ப	23	20	3

❖ விரிவான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

2021.12.31 ஆந் திகதியில் பணியாற் தொகுதியினரின் தகவல்கள்

தொடர் இல.	பதவியின் தன்மை	பதவி	உரிய சேவை	தரம்	சம்பள அளவுத்திட்டம் பொ.நி.சு. 03/2016)	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	வெற்றிடங்கள்
1	சிரேஷ்ட மட்டம்	செயலாளர்				1	1	0
2		மேலதிக செயலாளர்	SLAS	special	SL 3	1	1	0
3		மேலதிக செயலாளர் (விசேட ✪ கருத்திட்டம்)	-	special	SL 3	1	1	0
4		பிரதம நிதி அலுவலர்	SLAcS	special	SL 3	1	1	0
5		சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம் I)	SLAS	I	SL 1	1	1	0
6		சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம் II)	SLAS	I	SL 1	1	1	0
7		பிரதம கணக்காளர்	SLAcS	1	SL 1	1	1	0
8		பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்	SLAcS	I	SL 1	1	0	1

9		பணிப்பாளர்	SLPS	I	SL 1	1	1	0
10		பொறியியலாளர்	SLES	I	SL 1	1	0	1
11		உள்ளகக் கணக்காய்வாளர்	SLAcS	III	SL 1	1	0	1
12		உதவிச் செயலாளர் (நிருவாகம் II)	SLAS	III	SL 1	1	0	1
13		உதவிச் செயலாளர் (நிருவாகம் II)	SLAS	II/ III	SL 1	1	1	0
14		உதவிப் பணிப்பாளர்	SLPS	II/ III	SL 1	1	0	1
15		பொறியியலாளர்	SLES	II/ III	SL 1	1	0	1
16		கணக்காளர்	SLAcS	II/ III	SL 1	1	1	0
17		சட்ட அலுவலர்	Dept	II/ III	SL 1	1	0	1
		மொத்தம்				**17**	**10**	**7**
18	**மூன்றாம் நிலை**	நிருவாக அலுவலர்	PMAS	Supra	MN 7	1	0	1
19		செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர்	Tempo.			1	1	0
20		தகவல் தொழில்நுட்ப அலுவலர்			MN 6	1	1	0
		மொத்தம்				**3**	**2**	**1**
21	**இரண்டாம் நிலை**	அபிவிருத்தி அலுவலர்	Dos		MN 4	89	16	73
22		அரச முகாமைத்துவ உதவியாளர்	PMAS	I/ II/ III	MN 2	15	14	1
23		வீடியோ கெமரா கலைஞர் ✪	MA(T) 3		MT 1	1	1	0
		தகவல் தொழில்நுட்ப உதவியாளர்			MT1	1	0	1
24		புகைப்படக் கலைஞர்	Tempo.			1	0	1
		மொத்தம்				**107**	**31**	**76**
25	**ஆரம்ப நிலை**	சாரதி	DS		PL 3	12	9	3
26		அலுவலக சிற்றூழியர்	OES		PL 1	10	10	0
27		கெமரா இயக்குநர் உதவியாளர்	Tempo.			1	1	0
		மொத்தம்				**23**	**20**	**3**
		முழு அமாத்தம்				**150**	**63**	**87**
	✪ பதவி வகிப்பவருக்கு தனிப்பட்ட வகையில் ஏற்புடைய பதவி *** அபிவிருத்தி அலுவலர் பதவிகள் 58 அங்கீகரிக்கப்பட்டிருப்பது புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகத்திற்கு இணைப்புச் செய்வதற்காகவாகும்.							

6.2. நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனிதவளப் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தியிருக்கும் முறை

இந்த இராஜாங்க அமைச்சின் கீழ் சிறைச்சாலைகள் திணைக்களம், சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம் மற்றும் புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகம் ஆகிய பாரிய செயற்பணிகளை அமுல்படுத்தும் நிறுவனங்கள் இயங்கிவருவதன் காரணமாக மேற்படி நிறுவனங்கள் தொடர்பிலான ஒரங்கிணைப்பு உள்ளிட்ட பல நடவடிக்கைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. எனவே மேற்படி நடவடிக்கைகளுக்கு போதியளவு பதவியணி இல்லாமை சிறந்ததொரு சேவையைப் பெற்றுக் கொடுப்பது மற்றும் வினைத்திறனில் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்துவதனால் தற்போதைய வெற்றிடங்களை நிரப்புவது அத்தியாவசியமானதாக உள்ளது.

6.3. மனிதவள அபிவிருத்தி

நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித்தின் காலஎல்லை	ஒட்டுமொத்த முதலீடு		நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (உள்நாடு /வெளிநாடு)	வெளியீடு / பெற்றுக்கொண்ட அறிவு *
			உள்நாடு	வெளி நாடு		
அலுவலக முறை பற்றிய பயிற்சிச் செயலமர்வு	06	02 நாள்	ரூ.48,000.00		உள்நாடு	
பொருளியல் பற்றிய பட்டப் பின் படிப்பு	01	ஒரு வருட பாடநெறி	ரூ.80,000.00		உள்நாடு	
தமிழ் மொழி பற்றிய பாடநெறி	30	150 மணித்தியாலம்	ரூ.112,000.00		உள்நாடு	

அமைச்சின் பதவியணியில் (அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை அலுவலர்கள்) கூடுதலானோர் புதிய அலுவலர்களாக செயற்படுவதனால் மேற்படி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமைச்சின் செயலாற்றுகைக்கு பெரும் உந்துதலாக அமையும்.

7

இயைபு அறிக்கை

இலக்கம்	ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய தேவைப்பாடு	இயைபு நிலைமை (ஏற்புடையதாகின்றது /ஏற்புடையதாவதில்லை)	ஏற்புடையதாவதில்லை எனின் அதற்கான சுருக்கமான விளக்கம்	ஏற்புடையதாகாமையை எதிர்காலத்தில் தடுத்துக் கொள்வதற்காக பிரேரிக்கும் சரியான தீர்மானம் நடவடிக்கை
1.	**கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1.	வருடாந்த நிதிக் கூற்றுக்கள்	ஏற்புடையதாகின்றது		
1.2.	அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு	ஏற்புடையதாகின்றது		
1.3.	தொழில் மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வணிக முற்பணக் கணக்கு)	ஏற்புடையதல்ல	இந்த அமைச்சினால் இவ்வாறான கணக்குகள் பேணிவரப்படுவதில்லை.	
1.4.	களஞ்சிய முற்பணக் கணக்கு	ஏற்புடையதல்ல		
1.5.	விசேட முற்பணக் கணக்கு	ஏற்புடையதல்ல		
1.6.	வேறு	ஏற்புடையதல்ல		
2.	**புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவருதல் (நி.பி. 445)**			
2.1.	பொது நிருவாக சுற்றறிக்கை 267/2018 இற்கமைய நிலையான சொத்துப் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.2.	ஆளுக்குரிய வேதனாதிகள் பதிவேடு / ஆட்களின் சம்பள அட்டைகளை பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.3.	கணக்காய்வு வினாக்களுக்கான பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.4.	உள்ளக கணக்காய்வு அறிக்கை பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதல்ல	உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அமைச்சில் இயங்கவில்லை	

2.5.	சகல மாதாந்த கணக்குப் பொழிப்பு அறிக்கைகளையும் தயார் செய்து பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.6.	காசோலை மற்றும் காசுக் கட்டளைப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.7.	பொருட் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.8.	இருப்புப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.9.	நட்டம் இழப்பு பற்றிய பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.10.	பொறுப்புகள் பற்றிய பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
2.11.	உபஆவணப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் (GA-N20)	ஏற்புடையதாகின்றது		
3.	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகள் பகிரப்பட்டிருத்தல் (நி.பி. 135)**			
3.1.	நிதி அதிகாரம் நிறுவனத்திற்குள் பொறுப்பளிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
3.2.	நிதி அதிகாரத்தை பொறுப்பளிப்பது பற்றி நிறுவனத்திற்குள் விழிப்புணர்வூட்டியிருத்தல்.	ஏற்புடையதாகின்றது		
3.3.	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் அலுவலர்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையானோர் ஊடாக அங்கீகரிக்கப்படக் கூடியவாறு அதிகாரம் பொறுப்பளிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
3.4.	2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைய, அரச சம்பள ஆவண மென்பொருள் பொதி (பெகேஜ்) யை பயன்படுத்தும் போது கணக்காளரின் நிருவாகத்திற்கு உட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளல்	ஏற்புடையதாகின்றது		
4.	**வருடாந்த திட்டங்களைத் தயார் செய்தல்**			
4.1.	வருடாந்த செயற்றிட்டத்தை தயார் செய்தல்	ஏற்புடையதாகின்றது		
4.2.	வருடாந்த பெறுகைத் திட்டத்தை தயார் செய்தல்	ஏற்புடையதாகின்றது		

4.3.	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை தயார் செய்தல்	ஏற்புடையதல்ல	உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இந்த அமைச்சில் இயங்கவில்லை	
4.4.	வருடாந்த மதிப்பீட்டைத் தயார் செய்து தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திடம் உரிய திகதியில் சமர்ப்பித்தல்	ஏற்புடையதாகின்றது		
4.5.	வருடாந்த காசோட்டக் கூற்றை உரிய திகதியில் திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திடம் சமர்ப்பித்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
5.	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதியில், சகல கணக்காய்வு வினாக்களுக்கும் விடையளித்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
6.	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1.	நி.பி. 134(2) DMA/1-2019 இற்கமைய, ஆண்டின் ஆரம்பத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை தயார் செய்தல்	ஏற்புடையதல்ல	2021 ஆம் ஆண்டு பிரதன உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதனால் உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை.	2022 ஆம் ஆண்டு முதல் பிரதன உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடத்தை பூர்த்தி செய்து உள்ளகக் கணக்காய்வுப் பிரிவைத் தாபித்தல்
6.2.	ஒவ்வொரு உள்ளக கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலப்பகுதிக்குள் விடையளித்திருத்தல்	ஏற்புடையதன்று	மேலே	மேலே
6.3.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உட்பிரிவுக்கு அமைய, சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதன்று	மேலே	மேலே

6.4.	நிதிப் பிரமாணம் 134(3) இற்கமைய, சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதன்று	மேலே	மேலே
7.	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1.	DMA சுற்றறிக்கை 1-2019 இற்கமைய, ஆகக் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 உரிய ஆண்டில் நடாத்தியிருத்தல்.	2021 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டுக்கு மாத்திரம் ஒரு கூட்டம் நடாத்தப்பட்டது		
8.	**சொத்து முகாமைத்துவம்**			
8.1.	01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திடம் சமர்ப்பித்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
8.2.	மேற்படி சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதை ஒருங்கிணைப்புக்கு பொருத்தமான ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவரை நியமனம் செய்து மேற்படி அலுவலர் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு அறிக்கையிட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
8.3.	அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இற்கமைய பொருட் கணிப்பீட்டை நடாத்தி குறித்த அறிக்கைகளை உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
8.4.	வருடாந்த பொருட் கணிப்பீட்டில் வெளிப்படுத்தப்பட்ட மிகை, குறை மற்றும் வேறு சிபாரிசுகளை சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள காலப்பகுதிக்குள் மேற்கொண்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
8.5.	சேதமடைந்த பொருட்களை அகற்றுவதை நி.பி. 772 இற்கமைய மேற்கொள்ளல்	ஏற்புடையதன்று		

9.	**வாகன முகாமைத்துவம்**			
9.1.	குழும வாகனங்களுக்கு நாளாந்த பயணக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை தயார் செய்து உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல்	ஏற்புடையதாகின்றது		
9.2.	வாகனங்கள் சேதமடைந்து 6 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதிக்குள் அகற்றியிருத்தல்	ஏற்புடையதாக இல்லை	குறித்த காலப்பகுதியில் அகற்றலுக்கான சேதமடைந்த வாகனங்கள் இல்லை.	
9.3.	வாகன லொக் புத்தகங்களைப் பேணிவருவதுடன் அவற்றை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
9.4.	ஒவ்வொரு வாகனம் தொடர்பிலும் நி.பி. 103,104,109, மற்றும் 110 இற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளல்	ஏற்புடையதாகின்றது		
9.5.	2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு பற்றி மீள் பரிசீலனை செய்தல்	ஏற்புடையதாகின்றது		
9.6.	லீசின் கொள்வனவுக் கால எல்லையின் பின்னர், லீசின் கொள்வனவு வாகனங்கள் லொக் புத்தகங்களில் முழு உரித்தையும் சாட்டுதல் செய்திருத்தல்		குறித்த காலப்பகுதிக்குள் லீசின் கொடுப்பனவு நிறைவு செய்யப்பட்ட வாகனங்கள் இல்லை.	
10.	**வங்கிக் கணக்கு முகாமைத்துவம்**			
10.1.	உரிய திகதிக்கு வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயார் செய்து சான்றுப்படுத்தி அவற்றை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
10.2.	மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டு வரப்பட்டுள்ள செயற்படாத வங்கிக் கணக்குகளை தீர்த்திருத்தல்	ஏற்புடையதாக இல்லை	செயற்படாத வங்கிக் கணக்குகள் அமைச்சிடம் இல்லை.	

10.3.	வங்கி இணக்கக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற மற்றும் சீராக்கல் செய்ய வேண்டியிருந்த நிலுவைகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொண்டு மேற்படி நிலுவைகளை ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்த்திருத்தல்.	ஏற்புடையதாகின்றது		
11.	**ஏற்பாடுகளைப் பயன்படுத்தல்**			
11.1.	செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளை அவற்றின் வரையறைகளை தாண்டாதவாறு செலவிடல்	ஏற்புடையதாகின்றது		
11.2.	நி.பி. 94(1) இற்கமைய செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளில் பயன்படுத்திய பின்னர் ஆண்டின் இறுதியில் எஞ்சிய ஏற்பாடுகளை வரையறைகளைத் தாண்டாதவாறு பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளல்	ஏற்புடையதாகின்றது		
12.	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1.	வரையறைகளுக்கு ஏற்புடையதாதல்	ஏற்புடையதாகின்றது		
12.2.	நிலுவையாக உள்ள கடன் நிலுவைகள் பற்றிய காலப் பகுப்பாய்வை மேற்கொள்ளல்	ஏற்புடையதாகின்றது		
12.3.	ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக காணப்பட்டு வருகின்ற நிலுவையாக உள்ள கடன் நிலுவைகளைத் தீர்த்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		
13.	**பொது வைப்புக் கணக்கு**			
13.1.	காலம் பூர்த்தியடைந்த வைப்புக்கள் தொடர்பில் நி.பி. 571 இற்கு அமைய நடவடிக்கை மேற்கொண்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
13.2.	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை இற்றைப்படுத்திப் பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
14.	**கட்டுநிதிக் கணக்கு**			
14.1.	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசேட்டின் மீதி திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
14.2	நி.பி. 371 இற்கமைய வழங்கப்பட்ட குறித்த பணிக்கான இடைக்கால கட்டுநிதி, மேற்படி பணி நிறைவு செய்யப்பட்டு ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்க்கப்பட்டிருத்தல்.	ஏற்புடையதாகின்றது		

14.3.	நி.பி. 371 இற்கமைய அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளைத் தாண்டாதவாறு குறித்த பணிக்கான இடைக்கால கட்டுநிதி வழங்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
14.4.	கட்டுநிதிக் கணக்கின் மீதி, திறைசேரியின் பதிவேடுகளுடன் மாதாந்தம் இணக்கம் செய்யப்படுதல்.	ஏற்புடையதாகின்றது		
15.	**வருமானக் கணக்கு**			
15.1.	குறித்த ஒழுங்குவிதிகளுக்கு அமைய சேகரிக்கப்பட்ட வருமானத்தில் மீளச் செலுத்தல்கள் செலுத்தப்பட்டிருத்தல்	ஏற்புடையதாக இல்லை	இந்த அமைச்சு வருமானம் சேகரிக்கும் அமைச்சொன்றல்ல.	
15.2	சேகரிக்கப்பட்ட வருமானங்கள், வைப்புக் கணக்கில் செலவு வைக்காது நேரடியாக வருமானத்திற்கு செலவு வைத்திருத்தல்	ஏற்புடையதாகின்றது	மேலே	
15.3.	நி.பி. 176 இற்கமைய நிலுவை வருமான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாக இல்லை	மேலே	
16.	**மனிதவள முகாமைத்துவம்**			
16.1.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வரையறைக்குள் பதவியணியை பேணிவருதல்	ஏற்புடையதாகின்றது		
16.2.	பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல் எழுத்து மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருத்தல்.	ஏற்புடையதாகின்றது		
16.3.	20.09.2017 ஆம் திகதிய MSD சுற்றறிக்கை இலக்கம் 04/2017 இற்கமைய சகல அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
17.	**பொது மக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்**			
17.1.	தகவல் அறியும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய தகவல் அலுவலர் ஒருவரை நியமனம் செய்து தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்.	ஏற்புடையதாகின்றது அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு தகவல்கள் வழங்கப்பட்டு பதிவேடொன்று இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுகின்றது.		

17.2.	நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் இணையத்தளம் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பதுடன், இணையத்தளம் அல்லது மாற்றுவழிமுறைகள் ஊடாக நிறுவனம் பற்றி பொது மக்களின் பாராட்டுக்கள் / பிரேரணைகளை வெளியிடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருத்தல்.	ஏற்புடையதாகின்றது பாராட்டுக்கள், குற்றச்சாட்டுக்களை வெளியிட வசதி செய்யப்பட்டுள்ளது.		
17.3.	தகவல் அறியும் சட்டத்தின் 08 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளுக்கு அமைய ஒவ்வொரு வருடமும் இரண்டு தடவை அல்லது ஒரு வருடத்தில் ஒரு தடவை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
18.	**பிரசைகள் பிரகடனத்தை அமுல்படுத்தல்**			
18.1.	05/2008 ஆம் இலக்க மற்றும் 05/2008(1) ஆம் இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய பிரசைகள் / சேவைபெறுநர் பிரகடனத்தை தயார் செய்து அமுல்படுத்தியிருத்தல்.	ஏற்புடையதாகின்றது		
18.2.	மேற்படி சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்திக்கு அமைய, பிரசைகள் /சேவைபெறுநர் பிரகடனத்தை தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்தும் நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்தல், மதிப்பீடு செய்வதற்காக நிறுவனத்தினால் முறையியல் ஒன்று தயார் செய்யப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
19.	**மனிதவள திட்டத்தை தயார் செய்தல்**			
19.1.	2018.01.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் இணைப்பு 02 இன் மாதிரிப் படிவத்தின் அடிப்படையில் மனிதவளத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளமை	ஏற்புடையதாகின்றது		
19.2.	பதவியணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வருடத்திற்கு ஆகக் குறைந்தது 12 மணி நேரத்திற்குக் குறையாத பயிற்சி வாய்ப்பை மேற்படி மனிதவளத் திட்டத்தில் உறுதி செய்திருத்தல்	ஏற்புடையதாகின்றது		

19.3.	மேலுள்ள சுற்றறிக்கையின் 01 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பதவியணியினருக்கும் வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது செயலாற்றுகை அறிக்கை கையொப்பமிடப்பட்டுள்ளது.		
19.4.	மேற்படி சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்திக்கு அமைய மனிதவள அபிவிருத்தித் திட்டத்தை தயார் செய்தல், திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பில் பொறுப்புக்கள் அளிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருத்தல்	ஏற்புடையதாகின்றது		
20.	**கணக்காய்வு பந்திகள் தொடர்பில் பதில் நடவடிக்கை மேற்கொள்ளல்**			
20.1.	கடந்த ஆண்டுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சீராக்கல் செய்யப்பட்டுள்ளமை.	ஏற்புடையதாகின்றது		

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. : PAF/C/SMPMPRA/FS/02/21/19 2022 மே 17 ஆம் திகதி

செயலாளர்

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கை இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

டப்ளியு.ஜீ.என்.மெனிகே

பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக.

பிரதி : 01. பணிப்பாளர் நாயகம் - அரச கணக்குகள் திணைக்களம்

02. செயலாளர், நீதி அமைச்சு

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. : PAF/C/SMPMPRA/FS/02/21/19 202 மே .... ஆம் திகதி

செயலாளர்

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பளியுள்ள கருத்துரை

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது கட்டளைப் பிரகாரம் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) பிரிவின் பிரகாரம் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கருத்துரைகளைத் தெரிவித்தல் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையில் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கம் தவிர, நிதிக் கூற்றுக்களின் ஊடாக 2021 திசெம்பர் 31 ஆம் திகதியன்று சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வளிப்பு

நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மை மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்புகின்றதென்பது எனது கருத்தாகும்.

1.2 <u>முனைப்பளியுள்ள கருத்துரைக்கான அடிப்படை</u>

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்துரை மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய (இ.க.த) என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையை வழங்குவதன் நிமித்தம் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுக்கான சாட்சிகள் போதுமானவை மற்றும் பொருத்தமென்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 <u>நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்</u>

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கமைய மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய உண்மை மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தும் வகையில் நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் ஊழல் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களை தயாரிக்க முடியுமாக இருப்பதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) ஆவது பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சினால் வருடாந்த மற்றும் குறித்த காலப்பகுதிக்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க முடியுமான பிரகாரம் தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணிவரல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவிற்கமைய இராஜாங்க அமைச்சின் நிதி நிர்வாகத்திற்காக விளைதிறன்மிக்க உள்ளக நிர்வாக முறைமையை தயாரித்துப் பேணிவருவதனை தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டுமென்பதுடன் அந்த முறைமையின் விளைதிறன் சம்பந்தமாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்றை மேற்கொண்டு அதற்கமைய முறைமையை விளைதிறன்மிக்க வகையில் நடாத்துவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்று ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராதவை என நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வெளியிடுவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான உறுதிப்பாடு இல்லாதிருக்கும். ஊழல் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியுமாக இருப்பதுடன் இந்த நிதிக் கூற்றை அடிப்படையாகக்கொண்டு ஆய்வாளர்களால் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் எடுக்கப்படும்போது அது சம்பந்தமாக கவனத்தைச் செலுத்த வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில் நியாயம் மற்றும் தொழில் ஐயுறவுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வுக் கருத்துரைக்கான அடிப்படையைப் பெற்றுக்கொள்ளும்போது ஊழல் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் பொய்க் கூற்றுக்களின் ஆபத்தை இனங்கண்டுகொள்ளல் மற்றும் மதிப்பீட்டை மேற்கொள்ளும்போது சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. தவறுதலாக குறிப்பிடப்படுதல் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் ஊழல் காரணமாக ஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன், கெட்ட கூட்டணி, பொய் ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல், தவறாகக் குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் ஊழல் இடம்பெறுவதற்கான காரணங்களாகும்.
- உள்ளக நிர்வாகத்தின் பயன்தருதன்மை சம்பந்தமாக கருத்தை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லையாயினும், சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக நிர்வாகம் சம்பந்தமான தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருத்தலை மதிப்பீடு செய்தல்.
- நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமை மற்றும் வெளிப்படுத்தல்கள்

உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டது.

1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (ஈ) ஆவது பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திசைந்திருக்கின்றது.

(ஆ) முன்னைய ஆண்டுக்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் முன்வைக்கப்பட்ட இந்த அறிக்கையின் 1.6.1.1.(இ) மற்றும் 1.6.1.2 ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டில் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

1.6 நிதிக் கூற்றுக்கள் பற்றிக் கருத்துத் தெரிவித்தல்

1.6.1 நிதி நிலைமை பற்றிய கூற்று

1.6.1.1 நிதி அல்லாத சொத்துக்கள்

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பணியகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூ.4,706,999 பெறுமதிமிக்க டயர்களின் பெறுமதி நிதி அல்லாத சொத்துக்களாக கணக்கில் பதியப்பட்டிருந்தமையின் காரணத்தினால் நிதி அல்லாத சொத்துக்கள் ரூ.4,706,999 அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பணியகத்தின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியாகும்போது பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த ரூ.246,200,000 பெறுமதிமிக்க கட்டிட நிர்மாணங்கள் மூலதன மயப்படுத்தப்பட்டு கணக்கில் பதிவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பணியகம் அமைந்துள்ள கட்டிடத்திற்கான வாடகை முற்பணத் தொகையாக ரூ.7,690,560 வும், பணிகளுக்கான முற்பணத் தொகையாக ரூ.19,327,232 வும் செலுத்தப்பட்டிருந்தது. ஆயினும் இந்த வாடகை மற்றும் பணிகளுக்கான முற்பணத் தொகைகள் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படாமையின் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் நிதிச் சொத்துக்களின் கீழ் வாடகை மற்றும் பணிகளுக்கான முற்பணக் கணக்கில் மற்றும் இருப்புக் கணக்கில் ரூ.27,017,792 குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பணியகத்திற்குரிய 02 செலவு விடயங்களுடன் தொடர்பாக ரூ.4,569,561 பெறுமதிமிக்க பொறுப்புக்கள் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(உ) புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பணியகத்தின் கட்டிடங்கள் நிர்மாணிப்புக்காக வெளித் தரப்புக்களுக்கான கடப்பாடுகளின் பெறுமதியான ரூ.346,210,705 தொகை 2021 திசெம்பர் 31 ஆம் திகதியன்று கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிதி நிலைமை பற்றிய கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.287,982,491 பெறுமதிமிக்க நிதி அல்லாத சொத்துக்களை பௌதிக ரீதியில் பரிசீலித்து உறுதிப்பாடொன்றைப் பெற்று கணக்கில் பதிவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.6.1.2 <u>காசுப் பாய்ச்சல் கூற்று</u>

பௌதிகச் சொத்துக்கள் கையகப்படுத்தல்களின் பெறுமதி ACA - 6 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் ரூ.6,603,739 ஆக இருந்தாலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் பௌதிகச் சொத்துக்கள் கையகப்படுத்தல்களின் பெறுமதிக்கு மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுச் செலவு, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பணியகத்தின் மூலதனச் செலவுகள், திறன் விருத்தி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவுகள் சேர்க்கப்பட்டு ரூ.320,757,336 எனக் குறிப்பிடப்பட்டமையினால் முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான செலவுகள் ரூ. 314,153,597 அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான செலவுகளின் பெறுமதி ரூ. 314,153,597 குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது.

2. <u>நிதி மீளாய்வு</u>

2.1 <u>செலவுகள் முகாமைத்துவம்</u>

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஒரு மீண்டெழும் செலவு விடயத்தில் மற்றும் 03 மூலதன செலவு விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.3,000,000 மொத்தத் தேறிய நிதி ஏற்பாடும் பயன்படுத்தப்படாமல் மீதமாக இருந்தது.

(ஆ) 07 மீண்டெழும் செலவு விடயங்கள் மற்றும் 03 மூலதன செலவு விடயங்களுடன் தொடர்பாக 50 சதவீதத்திலும் அதிகமான மீதியைக் காண முடியுமாக இருக்கின்றது. மேலும், 04 செலவு விடயங்களுக்கு நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றல்களை மேற்கொண்டமையின் பின்னரும் 66 சதவீதத்திலிருந்து 91 சத வீதம் வரையான வீச்சில் மீதமடைந்திருந்தமையை அவதானிக்க முடியுமாக இருக்கின்றது.

2.2 தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுப்படுத்த வேண்டியிருந்தாலும் அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(அ) அமைச்சின் நிதி நிர்வாகத்திற்காக பயன்மிக்க உள்ளக நிர்வாக முறைமையொன்றை தயாரித்துப் பேணி வருவதனை தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டுமென்பதோடு அந்த முறைமையின் விளைதிறன் சம்பந்தமாக காலத்திற்குக் காலம் மீளாய்வை மேற்கொண்டு அதற்கமைய முறைமையை விளைதிறன்மிக்க வகையில் பேணி வருவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும், அந்த மீளாய்வுகளை எழுத்து மூலமாக மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வுகளை மேற்கொண்டமைக்கான கூற்றுக்கள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளகக் கணக்காய்வு அலுவல்களை உரிய பிரகாரம் நடைமுறைப்படுத்துவதற்காக சிறப்பான செயல்முறையொன்று இருப்பதாக தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கமைய அந்தத் தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

2.3 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	விபரம்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை	
(i) நிதிப் பிரமாணம் 104 (1)	பிரமாணத்திற்கமைய PG - 9139 ஆம் வாகனத்திற்கு 2021 திசெம்பர் 28 ஆம் திகதி ஏற்பட்ட விபத்து சம்பந்தமான ஆரம்ப விசாரணையை நடாத்துவதற்கு 2022 மார்ச் 31 ஆம் திகதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

(ii)	நிதிப் பிரமாணம் 104 (3) மற்றும் 104 (4)	விபத்து ஏற்பட்டவுடனேயே ஆரம்ப அறிக்கையொன்றையும், சேதம் நிகழ்ந்த திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் பூரண அறிக்கையொன்றையும் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 05 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக விபத்து நிகழ்ந்து 05 மாதங்கள் முதல் 03 வருடங்கள் வரையான காலப் பகுதியினுள் அறிக்கை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.
(iii)	நிதிப் பிரமாணம் 1641 மற்றும் 1642	மீளாய்வாண்டில் KQ - 5420 ஆம் வாகனத்தை ரூ. 51,000 செலவு செய்யப்பட்டு பழுதுபார்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டாலும் விபத்து சம்பந்தமாக நிதிப் பிரமாணங்களுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.
(ஆ)	2017 திசெம்பர் மாதம் 21 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02 (i) ஆம் பந்தி	பதிவு ரீதியிலான உரித்துடைமை இல்லாமல் பயன்படுத்தப்படும் வாகனங்களை பதிவு செய்யப்பட்டிருக்கும் நிறுவனத்தின் இணக்கப்பாட்டுடன் தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்துகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் இரத்துச் செய்யப்பட்ட அமைச்சொன்றிடமிருந்து ஒப்படைக்கப்பட்ட 15 வாகனங்கள் சம்பந்தமாக சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(இ)	2019 திசெம்பர் 04 ஆம் திகதிய 07/2019 ஆம் இலக்க வரவு செலவுச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி	உரிய பிரகாரம் செலவுக் கட்டப்பாட்டு அளவுகோல்களை பயன்படுத்திக்கொள்வதும் அந்த அளவுகோல்களூடாக செலவுகள் கட்டுப்படுத்தப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்திக்கொள்ளல் தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகுமென வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களை ஆரம்பிக்க முடியுமான காலப் பகுதிகளை சரியாக இனங்கண்டு கொள்ள முடியாத நிலைமையில் மீளாய்வாண்டில் ரூ. 61,801,989 பெறுமதிமிக்க பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ)	2021 ஏப்ரல் 09 ஆம் திகதிய CGIR / 2021/02 - 02 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கடிதம் மற்றும் பெறுகை வழிகாட்டிக் கொவையின் 5.4.12 வழிகாட்டி	மீளாய்வாண்டில் வெளித் தரப்புக்களிடமிருந்து பொருட்கள் மற்றும் செவைகளை கொள்வனவு செய்யும்போது செலுத்தப்பட்ட ரூ. 162,898 வற் வரித் தொகை சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் காலாண்டின் இறுதியில் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 1 ஆம் பகுதியின் 13.2 ஆம் பந்தி - நிதிப் பிரமாணம் 770 (4) (அ)	புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பணியகத்திற்குச் சொந்தமான புறத்தொதுக்க வேண்டிய 03 வாகனங்கள், சுற்றறிக்கைப் பிரகாரம் மீளாய்வாண்டில் புறத்தொதுக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.4 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்த்தல்

பணித் தடைக்கு ஆளாகியுள்ள இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. 229,320 பெறுமதிமிக்க இடர் கடன் நிலுவை 05 வருடங்களிலும் அதிக காலமாக மற்றும் மரணித்துள்ள உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. 10,000 பெறுமதிமிக்க இடர் கடன் நிலுவை 02 வருடங்களிலும் அதிக காலமாக தீர்க்கப்படாதிருப்பினும் அந்த நிலுவைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ குறைபாடுகள்

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 03 வாகனங்கள் தொடர்பாக பழுதுபார்ப்புக்களை உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப பொறியியலாளரால் பரிந்துரை செய்யப்படாதிருக்கையில் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி ரூ.1,394,835 பெறுமதிமிக்க வவுச்சர்களை அங்கீகரித்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பணியகத்திற்கு கட்டிடமொன்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளுதல் சம்பந்தமாக கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பணியகம் அமைந்துள்ள கட்டிடத்தின் மதிப்பீட்டறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் கட்டிட உரிமையாளருடன் உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கும் முன்னர் குறித்த நிறுவனத்துடன் ரூ.8,380,420 தொகைக்கு கட்டிடத்தில் அலுவலகத்திற்கேற்றவாறு பகுதிகளைப் பிரித்துக்கொள்வதற்காக

(Partition) பணி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், மாதாந்த வாடகை ரூ.2,400,000 என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த அந்தக் கட்டிடத்திற்கு அந்த மதிப்பீட்டுப் பெறுமதியைப் பார்க்கிலும் ரூ. 163,520 அதிகமான மாதாந்த வாடகைக்கு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டமை காரணமாக 02 வருட காலத்திற்கு ரூ. 3,924,480 வாடகைத் தொகையை மேலதிகமாக செலுத்த வேண்டியேற்பட்டுள்ளது.

(ii) பணியகத்திற்கு 14,524 சதுர அடி பரப்பளவைக் கொண்ட பெறுகைகள் ஆணைக்குழு அலுவலகம் நடாத்தப்பட்ட கட்டிடத்தை ரூ. 2,454,556 தொகை மாதாந்த வாடகைக்குப் பெற்றுக்கொள்வதனூடாக அதிக இட வசதி மற்றும் பொருளாதார ரீதியிலான அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 19,858 சதுர அடி பரப்பளவைக் கொண்ட கட்டிடமொன்றை ரூ. 2,563,520 மாதாந்த வாடகைக்குப் பெற்றுக் கொண்டமையினால் மாதாந்தம் ரூ. 108,964 அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. இது தவிர நிலையான சொத்துக்கள், கணனி வலையமைப்பு மற்றும் பகுதிகள் பிரிக்கப்பட்டிருந்த (Partition) அந்தக் கட்டிடத்தைப் பெற்றுக்கொள்வதனால் பெறப்படவிருந்த வசதிகளை இழக்க நேரிட்டது. அமைச்சினால் உரிய காலப் பகுதியில் சரியான தீர்மானத்தை எடுக்காதிருந்தமையினால் 02 வருடங்களுக்காக வாடகைத் தொகையாக மேலதிகமாக ரூ. 2,615,136 மற்றும் அறைகளை பிரிப்பதற்கு (Partition) மற்றும் கணனி வலையமைப்புக்காக ரூ. 10,642,740 மேலதிக செலவொன்றை மேற்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளது.

(இ) 2017 நவம்பர் 22 ஆம் திகதிய, அப/17/2509/745/016 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தினூடாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பணியக சட்ட மூலத்தை தயாரிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன், 2021 ஏப்ரல் 28 ஆம் திகதிய அப/21/0564/330/029 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தினூடாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பணியக சட்ட மூலத்திற்கு சட்ட மா அதிபரின் அனுமதியுடன் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை சட்ட மூலத்துடன் தொடர்பான அலுவல்கள் நிறைவு செய்யப்படவில்லை.

3.2 <u>பெறுகைகள்</u>

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) அமைச்சினால் மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக 9.5 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்த போதிலும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.4.3 (அ) பிரகாரம் அறிவித்தல்களைப் பிரசுரித்தல் பொருளாதார ரீதியில் தீமை பயப்பதாக இருப்பதனால் குறைந்த பெறுமதிகளைக் கொண்ட உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்காக அல்லது எப்போதும் பயன்படுத்தும்

உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்காக வழங்குனர்களை பதிவு செய்துகொள்ள வேண்டியிருந்த போதிலும் அமைச்சினால் 2021 ஆம் ஆண்டிற்காக அவ்வாறு வழங்குனர்கள் பதிவு செய்துகொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சுக்காக ரூ. 2,936,346 மற்றும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பணியகத்திற்காக ரூ. 3,452,906 பெறுமதிமிக்க பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்யும்போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.1.1 இனைப் பின்பற்றாது விலை மனுக்கோரல் எழுத்தாவணங்களை நேரடியாகக் கையளித்து விலை அளவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) உரிய விவரக் குறிப்புக்களை வழங்குனர்களுக்கு சமர்ப்பிக்காமையின் காரணமாக ரூ. 1,227,889 பெறுமதிமிக்க தளப்பரப்பை இடுதல் மற்றும் Work Station பொருத்துதல் அலுவல்களுக்காக குறைந்த விலை அளவுகளை மாத்திரம் கவனத்திற்கொண்டு வழங்குனர்களை தெரிவு செய்வதற்கான பரிந்துரைகளை முன்வைத்தமை பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1 (ஊ) பிரகாரம் மதிப்பீடு செய்தல் மற்றும் தெரிவு செய்தல் நடைமுறையின் வெளிப்படைத் தன்மை மற்றும் நிச்சயத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.11 இனைப் பின்பற்றாது வற் வரிக்காக பதிவு செய்து கொள்ளாத வழங்குனர் ஒருவருக்கு ரூ. 807,840 பெறுமதிமிக்க Work Station பொருத்துதல் மற்றும் ரூ. 422,049 பெறுமதிமிக்க தளப்பரப்பை இடுதல் அலுவல்களுடன் தொடர்பான வற் வரியாக ரூ. 89,393 செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 2022 மார்ச் 28 ஆம் திகதி வழங்குனர் வற் வரித் தொகையில் ரூ. 59,840 தொகையை திருப்பி அமைச்சுக்கு செலுத்தியதனூடாக விலை அளவுகளை திறக்கும் குழு, தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு மற்றும் பெறுகைகள் குழு போன்ற குழுக்களால் வற் வரி சம்பந்தமாக கவனத்தைச் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்ற விடயத்தை அவதானிக்க முடியுமாக இருக்கின்றது.

3.3 வாகனங்கள் தொடர்பான நிர்வாகம்

2018 யூலை 01 ஆம் திகதி விபத்துக்குள்ளான PH - 1288 ஆம் இலக்க கெப் வண்டியின் பழுதுபார்ப்புச் செலவு ரூ. 2,290,015 ஆக இருந்ததுடன் அதில் ரூ. 1,698,894 தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்ததுடன், மீதித் தொகையான ரூ. 591,120 அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தமையின் காரணமாக அந்த நட்டம் சம்பந்தமாக அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4. நல்லாளுகை

4.1 உள்ளகக் கணக்காய்வு

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 (1) ஆம் பிரிவு மற்றும் 40 (2) (1) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2019 ஜனவரி 12 ஆம் திகதிய, DMA/01 - 2019 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களச் சுற்றறிக்கையின் 5.3 ஆம் பந்தியின் பிரகாரம் குறைந்தது காலாண்டுக்கொருமுறை என்ற ரீதியில் வருடத்தில் 4 கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

5. மனித வளங்கள் முகாமைத்துவம்

5.1 அங்கீகரிக்கப்பட்ட ஆளணி, உண்மையான ஆளணி மற்றும் ஆளுக்கான வேதனாதிகளுக்கான செலவுகள்

அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் எண்ணிக்கை 92 ஆகும். உண்மையான ஆளணி 62 ஆகும். மீளாய்வாண்டில் ஆளுக்கான வேதனாதிகளுக்காக ரூ. 45,436,136 செலவிடப்பட்டுள்ளது.

டப்ளியு.ஜீ.என்.மெனிகே
பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக.

பிரதி : 01. பணிப்பாளர் நாயகம் - அரச கணக்குகள் திணைக்களம்
02. செயலாளர், நீதி அமைச்சு